NATIONALER ZUKUNFTSTAG
Seitenwechsel für Mädchen und Jungs

## தேசிய எதிர்காலத்திற்கான நாள்; (Nationaler Zukunftstag )- முக்கிய விடயங்கள்

Njrpa எதிர்காலத்திற்கான நாளின் நோக்கம் என்னவெனில் ஆண் பெண் இருபாலரும் தமது பாலினத்தில் தங்கியிராத பொதுவான வேலை- மற்றும் வாழ்க்கை பற்றிய ஒழுங்கமைப்புகளை மாணவ மாணவிகளுக்கிடையில் முன்னேற்றப்படுத்துவதாகும். இந்த நாளன்று நூற்றுக்கும் அதிகமான நிறுவனங்கள், தொழிற்கூடங்கள், தொழிற்கல்வி நிறுவனங்கள் மற்றும் உயர்நிலைப்பாடசாலைகள் சுவிஸ் முழுவதும் தமது கதவினைத் திறந்து வைத்திருக்கும். சிறுவர் சிறுமியர் 5ம் வகுப்பு முதல் 7ம் வகுப்புப் படிப்பவர்கள், மற்றும் அவர்களை வழி நடத்துபவர்களுடன் கூடச் செல்லவோ அல்லது பல்வேறு உற்சாகமான விசேட செயற்திட்டங்களில் பங்கெடுக்கவே வரவேற்கப்படுகிறார்கள். «பக்கமாற்றல்»(Seitenwechsel) என்ற பொன்மொழிக்கு அமைய பாலின வேறுபாடற்ற வேலைவாய்ப்புகளையும் அவற்றின் நடைமுறைகள் மற்றும் பல்வேறு வித்தியாசமான வேலைவகைகளையும் அறிந்து கொள்ள ஏதுவாகின்றது.

உங்களுக்கு 5ம் வகுப்பு முதல் 7ம் வகுப்புப் படிக்கும் மகன் அல்லது மகள் உள்ளாரா? அப்படியானால் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துங்கள். பல்வேறு வாய்ப்புகள் தேசிய எதிர்காலத்திற்கான நாளில் பங்கெடுக்கவுள்ளன:

### அடிப்படைத்திட்டம்:

சிறுமி அல்லது சிறுவன் தம்மை வழிநடத்துபவருடன் அவரின் வேலைக்குச் செல்லுதல் வழிநடத்துபவரைத் தெரிவுசெய்யும் போது பக்கமாற்றலைக் கருத்தில் எடுக்க வேண்டும்.

அதற்குப் பலவழிகள் உள்ளன உதாரணமாக:

• சிறுமிகள் அவர்களின் தகப்பனுடனும், சிறுவர்கள் அவர்களின் தாயுடனும் செல்லுதல் ( அல்லது நெருங்கிய உறவினருடன்);
• சிறுமிகள் சென்று பார்வையிடும் வேலை அதிகமாக ஆண்கள் வேலைசெய்வதாகவும் சிறுவர்கள் செல்லுமிடம் அதிகபெண்களால் செய்யப்படும் வேலையாகவும் இருக்கலாம்.

### 1. விசேட செயற்திட்டம்: சிறுவர் சிறுமியர் தங்கள் தேர்ந்தெடுக்கும் விசேடசெயற்திட்டங்களில் பங்கெடுத்தல்

எண்ணற்ற தொழிற்கூடங்கள் நிறுவனங்கள் மற்றும் கல்லூரிகள் தேசிய எதிர்காலநோக்கத்திற்கான நாளில் சிறப்பான செயற்திட்டங்களை ஒழுங்கமைக்கின்றன மற்றும் சிறுவர் சிறுமியரை அவர்கள் பாலினத்திற்கு இயல்பற்ற வேலைகளை கண்டறிய அழைக்கின்றனர். நீங்கள் இப்படியான விசேட செயற்திட்டங்களில் உங்கள பிள்ளைகள் பங்கெடுக்க விரும்பினால் கீழ்வரும் நடைமுறையில் செல்லலாம்:

செயற்திட்டம் பற்றிய பொதுவான தகவல்களை நீங்கள்: "சிறுமிகளுக்கான விசேட செயற்திட்டம்" - (Spezialprojekte für Mädchen) அல்லது "சிறுவர்களுக்கான விசேட செயற்திட்டம்" (Spezialprojekte für Jungen) என்பதின் கீழ் அறிந்துகொள்ளலாம்.

பின்வரும் இணையத்தள முகவரி மூலம் உங்களுடைய மகன் அல்லது மகளை தாங்கள் வாழும் நகரத்திலுள்ள விசேட செயற்திட்டத்தில் பதிவுசெய்யலாம்;;: http://www.nationalerzukunftstag.ch/de/angebote/

## பங்கெடுப்பதற்கான உபயோகமுள்ள தகவல்கள்:

## தங்கள் வேலைத்தளத்தில்

உங்களுடைய வேலையிடத்தில் தங்கள் பிள்ளை தேசிய எதிர்காலத்திற்கான நாளன்று தங்களுடன் வரலாமா என்று கேட்கலாம் மற்றும் தங்களுடன்வேலை செய்பவர்களிடம் இதைப்பற்றி அறியலாம். எண்ணற்ற வேலையிடங்கள் தேசிய எதிர்காலத்திற்கான நாளன்று தனிப்பட்ட நிகழ்ச்சிநிரலை வைத்திருப்பர்.

## பாடசாலையில்

பாடசாலையில் தேசிய எதிர்காலத்திற்கான நாளன்று வகுப்புடன் ஏதாவது ஒழுங்கமைக்கின்றதா எனக்கேளுங்கள். அப்படியில்லையெனில் வகுப்பிற்கு பிள்ளை அன்று விடுமுறைஎடுப்பதற்கான மனுவை அளியுங்கள். இது கன்டோனுக்கு கன்டோன் வேறுபட்டு அமையும். தேசிய எதிர்காலத்திற்கான நாளன்று பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களுக்கென பாடசாலையில் செயற்திட்டங்களும் உண்டு.

- இங்கு விடுமுறைஎடுப்பதற்கான மனுவைப் பெற்றுக்கொள்ளலாம்: http://www.nationalerzukunftstag.ch/fileadmin/files/Dispensationsformular_18.pdf

## செயற்திட்டநாளின் ஒழுங்கமைப்பு

தேசிய எதிர்காலத்திற்கான நாளிற்கு முதலில் தங்கள் பிள்ளை எப்படியான வேலைகளை தனிச்சையாகச் செய்யலாம் என யோசியுங்கள். மற்றவர்களுடன் சேர்ந்து செய்வது மகிழ்ச்சியைத்தராது! கடிதம் பிரித்தல், முத்திரை ஒட்டுதல், பிரதியெடுத்தல், சிற்றுண்டி வாங்குதல் மற்றும் வேலைக்கான கருவிகளை வகைப்படுத்தல் போன்ற சிறிய வேலைகளாகக் கூட இருக்கலாம். அந்த நாளை ஒழுங்கமைப்பதற்கான பட்டியலை இங்கே hier பெற்றுக் கொள்ளலாம்.

## நேர்முகம்

தங்களுடன் வேலைசெய்பவரை தங்கள் பிள்ளை நேர்முகம் காணமுடியுமா என விசாரியுங்கள். தேசிய எதிர்காலத்திற்கான நாளில் எப்படியாக தொழிற்துறைகளில் சந்தர்ப்பங்கள் உள்ளன என்பதை இளையோர் அனுபவப்பட வேண்டும். அதனால் தங்கள் பிள்ளையின் கண்ணோட்டத்தில் மாறுபட்ட, பொதுவாக எல்லோராலும் செய்யப்படாத, புதுவித வேலை செய்பவரை தேர்வுசெய்து நேர்முகம் காணவையுங்கள். இங்கே நேர்முகம் செய்வதற்கான வினா மாதிரியைக் காணலாம்.(Interviewvorlage)

## தேசிய எதிர்காலத்திற்கான நாள் சம்பந்தப்பட்ட வினாக்கொத்து

செயற்திட்டம் முடிவடைந்தவுடன் உங்கள் பிள்ளையை அது சம்பந்தப்பட்ட வினாக்கொத்தினை (Fragebogen zum Zukunftstag) நிரப்பி இங்கே குறிப்பிட்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும்; (Geschäftsstelle des Nationalen Zukunftstags).